# அத்தஹாரத் ~ 05

**சுத்தம்**

- **புறச்சுத்தம்**
- **அகச்சுத்தம்**

❍ **ஒரு முஸ்லிமின் உள்ளம் பொறாமை, பெருமை, தப்பெண்ணம், என்பவற்றிலிருந்து சுத்தமாக இருப்பதே அகச்சுத்தம் எனப்படுகிறது.**

❍ **ஒரு முஸ்லிம் அவனது உடலை அசுத்தங்களிலிருந்து சுத்தமாக வைத்திருப்பதே புறச்சுத்தம் எனப்படுகிறது.**

## ➢ சுத்தத்தின் முக்கியத்துவம் தொடர்பான குர்ஆன், ஹதீஸ்.

❍ சுத்தம் ஈமானின் பாதி (முஸ்லிம்)

❍ நிச்சயமாக அல்லாஹ் பரிசுத்தமானவர்களையே நேசிக்கிறான். ( 09 : 106 )

❍ நபியே உமது ஆடைகளை தூய்மையாக வைத்திருப்பீராக. ( 74 : 04 )

# நீரும் அதன் வகைகளும்.




## குல்லதைன்

210 ℓ ஐ விடக் கூடுதலான நீர் குல்லதைன் எனப்படுகிறது.

## அல்மாஉன் தஹூர்

வுழூ செய்தல், கடமையான குளிப்பு போன்ற மார்க்க கடமைகளை நிறைவேற்ற பயன்படுத் முடியும்.

## அல்மாஉன் தாஹிர்

உணவு, மருந்து போன்றவற்றிற்க்காக பயன்படுத்த முடியும் ஆனால் மார்க்க கடமைகளை நிறைவேற்ற முடியாது.

## அல்மாஉன் முதனஜ்ஜிஸ்

இயல்பிலேயே அசுத்தமான நீர்.

## தொடக்குகளும் அவற்றை அகற்றுவதும்.

**ஹதஸ்**

| ஹதஸுல் அஸ்கர் – சிறு தொடக்கு | ஹதஸுல் அக்பர் – பெருந் தொடக்கு |
| --- | --- |
| இதிலிருந்து சுத்தமாக வுழு செய்ய வேண்டும். | இதிலிருந்து சுத்தமாக குளிக்க வேண்டும். |
| உதாரணம் : ❍ சிறுநீர் கழித்தல் | உதாரணம் : ❍ உடல் உறவு கொள்ளல். |

# தயம்மும்

☞ கடமையான வுழூவுக்கோ, குளிப்புக்காகவோ நீரைப் பயன்படுத்த முடியாத போது அதற்க்குப் பதிலாக சுத்தமான மண்ணைப் பயன்படுத்தி முகம் மற்றும் இரு கைகளைப் மஸ்ஹ் செய்வதே தயம்மும் எனப்படுகிறது.

## தயம்மும் செய்வதற்கான சந்தர்ப்பங்கள்.

1) நோயின் காரணமாக.
2) நீரின்மை காரணமாக.
3) நீரைப் பயன்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில்.
4) குடிப்பதற்க்கு மாத்திரம் நீர் இருக்கும் போது.

## ஜபீராத் (கட்டு)

☆ உடலுறுப்புகளில் காயம் ஏற்பட்டதற்க்காகப் போடப்படும் கட்டு (பென்டேஜ்) எனப்படுகிறது.